பிரஸார் பாரதி

அகில இந்தியவானொலி, சென்னை

02 03 2021 6 30

செவ்வாய்க்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கடல்சார் பொருளாதாரத்தைஊக்குவிக்கமத்தியஅரசுமுக்கியத்துவம் அளித்துவருவதாகபிரதமர் திருநரேந்திரமோடிதெரிவித்துள்ளார்.
2. மேற்குவங்கம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் முதற்கட்டவாக்குப்பதிவுக்கானஅறிவிக்கை இன்றுவெளியிடப்பட்டது.
3. தமிழகசட்டப்பேரவைத்தேர்தல் பாதுகாப்புப்பணிகளுக்கென 330 கம்பெனிதுணைராணுவப்படையினர் கோரப்பட்டுள்ளதாகதமிழகதலைமைத்தேர்தல் அதிகாரிதிருசத்யபிரதசாஹூ தெரிவித்துள்ளார்.
4. மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உரியஆவணமின்றிகொண்டுசெல்லப்பட்டரொக்கத்தைதேர்தல் பாதுகாப்பு படையினர் இன்றுபறிமுதல் செய்தனர்.
5. சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் இன்றுதொடங்குகின்றன.

{}<><><>{}

கடல்சார் பொருளாதாரத்தைமேம்படுத்துவதில் இந்தியாமகத்தானவெற்றிஅடையும் என்றுபிரதமர் திருநரேந்திரமோடிநம்பிக்கைதெரிவித்துள்ளார்.

கடல்சார் இந்தியஉச்சிமாநாட்டை இன்றுகாணொலி மூலம் தொடங்கிவைத்துஉரையாற்றியஅவர், இந்தியாவின் வளர்ச்சிப்பாதையில் பங்கேற்கஉலகநாடுகளுக்குஅழைப்பு விடுத்தார்.

கடல்சார் பொருளாதாரசீர்திருத்தங்களைஊக்கவிப்பதற்கும், அடிப்படைகட்டமைப்புகளைமேம்படுத்துவதற்கும் மத்தியஅரசுமுக்கியத்தவம் அளிப்பதாகபிரதமர் குறிப்பிட்டார்.

சுயசார்பு இந்தியாஎன்றதொலைநோக்குபார்வையைஅடைவதற்கு இந்தநடவடிக்கைகள் உதவும் என்றும், இந்ததுறைசார்ந்தபலரையும் இந்தஉச்சிமாநாடுஒருங்கிணைக்கும் என்றும் திருநரேந்திரமோடிநம்பிக்கைதெரிவித்தார்.

முன்னதாககடல்சார் இந்திய தொலைநோக்கு-2030 என்றமின்னணு புத்தகத்தைபிரதமர் வெளியிட்டார்.

அதிகஅளவு முதலீட்டைஈர்ப்பதன் மூலம் கடல்சார்ந்ததுறையைமேம்படுத்துவதற்கானமுக்கியபகுதிகளைகண்டறியும் வகையில் இந்த புத்தகம் அமைந்துள்ளது.

மூன்றுநாட்கள் நடைபெறவுள்ள இந்தஉச்சிமாநாட்டுக்குதுறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்துதுறைஅமைச்சகம் ஏற்பாடுசெய்துள்ளது.

வரும் பத்துஆண்டுகளுக்குள் இந்தியகடல்சார் துறையைஉலகஅளவில் மேம்படுத்துவதற்கானதிட்டங்கள் இந்தமாநாட்டில் வகுக்கப்படும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறுநாடுகளிலிருந்துவரும் பிரதிநிதிகள் இந்தமாநாட்டில் பங்கேற்று இந்தியகடல்சார் துறையில் தொழில் மற்றும் முதலீட்டுக்கானவாய்ப்புகள் குறித்துவிவாதிக்கவுள்ளனர்.

இந்தஉச்சிமாநாட்டில் தூத்துக்குடி வ உ சிதம்பரனார் துறைமுகத்தின் சார்பில் பல்வேறுநிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படஉள்ளதாகதுறைமுகஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

{}<><><>{}

மேற்குவங்கம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் சட்டப்பேரவைத்தேர்தல் முதல்கட்டவாக்குப்பதிவுக்கானஅறிவிக்கை இன்றுவெளியிடப்பட்டதையடுத்து, அம்மாநிலங்களில் வேட்புமனுதாக்கல் தொடங்கியது.

எட்டுகட்டங்களாகதேர்தல் நடைபெறவுள்ளமேற்குவங்க மாநிலத்தில் முதல் கட்டமாக 30 தொகுதிகளுக்குதேர்தல் நடைபெறவுள்ளது.

மூன்றுகட்டங்களாகதேர்தல் நடைபெறவுள்ள அஸ்ஸாம் மாநிலத்தில் முதல்கட்டதேர்தல் 47 தொகுதிகளுக்குநடைபெறவுள்ளது.

இந்ததொகுதிகளில் இம்மாதம் 27-ஆம் தேதிவாக்குப்பதிவு நடைபெறும்.

{}<><><>{}

தமிழகசட்டப்பேரவைத்தேர்தல் பாதுகாப்பு பணிகளுக்காக 330 கம்பெனிதுணைராணுவப்படைதேவைஎனதேர்தல் ஆணையத்திடம் கோரிக்கைவைக்கப்பட்டிருப்பதாகதமிழகதலைமைத்தேர்தல் அதிகாரிதிருசத்யபிரதசாஹூ தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்றுசெய்தியாளர்களிடம் பேசியஅவர், தற்போதுவரை 45 கம்பெனிதுணைராணுவப்படையினர் தமிழகம் வந்திருப்பதாகவும் கூறினார்.

மாநிலத்தில் தேர்தல் முன்னேற்பாடுபணிகளுக்காகஅனைத்துசட்டமன்றத் தொகுதிகளிலும் பறக்கும் படை, நிலைகண்காணிப்புப்படை, வீடியோபதிவு செய்யும் குழு, கணக்கீட்டுக்குழுஉள்ளிட்டஐந்துவகையானகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாககூறினார்.

அரசுமற்றும் பொது இடங்களில் ஒட்டப்பட்டிருந்த 61 ஆயிரம் போஸ்டர் மற்றும் பேனர்கள் நீக்கப்பட்டிருப்பதாகவும் இது தொடர்பாகபத்துக்கும் மேற்பட்டவழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் தனியார் மற்றும் பொது இடங்களில் பேனர்கள் வைத்ததற்காக 36 வழக்குகள் எனமொத்தம் 46 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

80 வயதிற்குமேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தபால் மூலம் வாக்களிப்பதற்குவசதியாகஅவர்களின் வீடுகளுக்கேசென்று இதுகுறித்தவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் முன்னேற்பாடுபணிகள் குறித்துதேர்தல் பார்வையாளர்கள் மற்றும் அரசின் பல்வேறுதுறை மூத்தஅதிகாரிகளுடன் நாளைதாம் ஆலோசனைநடத்தவிருப்பதாகவும் திருசத்யபிரதசாஹூ கூறினார்.

{}<><><>{}

தமிழகசட்டப்பேரவைத் தேர்தல் தேதிஅறிவிக்கப்பட்டுள்ளநிலையில், அரசியல் கட்சிகள் தொகுதி பங்கீடுகுறித்தபேச்சுவார்த்தையில் மும்முரமாகஈடுபட்டுவருகின்றன.

தேர்தலில் போட்டியிடவிரும்புவோரிடமிருந்துவிருப்பமனுக்களைபெறுவது, அவர்களிடம் நேர்காணல் நடத்துவதுஆகியவற்றிலும் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டிவருகின்றன.

{}<><><>{}

தமிழகத்தில் அஇஅதிமுக-பிஜேபி இடையேசட்டப்பேரவைத் தேர்தல் கூட்டணிதொடர்பானபேச்சுவார்த்தைகள் தொடர்ந்துநடைபெறுவதாகதமிழகபிஜேபிதேர்தல் பொறுப்பாளரும், மத்தியஅமைச்சருமானதிருவிகேசிங் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்றுசெய்தியாளர்களின் கேள்விகளுக்குபதில் அளித்தஅவர், பேச்சுவார்த்தைகளுக்குகாலக்கெடுஎதுவும் நிர்ணயிக்கப்படவில்லைஎன்றார்.

{}<><><>{}

சட்டப்பேரவைத் தேர்தலைமுன்னிட்டு, மேற்கொள்ளப்பட்டுவரும் கண்காணிப்பு பணிகளின்போதுமாநிலத்தின் பல்வேறு இடங்களில் உரியஆவணமின்றிகொண்டுசெல்லப்பட்டரொக்கத்தைதேர்தல் பாதுகாப்புப்படையினர் இன்றுபறிமுதல் செய்தனர்.

கடலூரைஅடுத்த கங்கனாகுப்பம் பகுதியில் ஆவணம் இன்றிகொண்டுசெல்லப்பட்ட 51 லட்சம் ரூபாயைபறக்கும் படையினா் பறிமுதல் செய்துள்ளனா்.

நாமக்கல் மாவட்டத்தில் இதுவரைஆறரைலட்சம் ரூபாயைபறக்கும் படையினா் பறிமுதல் செய்துள்ளனா்.

தேர்தல் நடத்தைவிதிமுறைகள் கண்காணிப்பு மற்றும் 100 சதவீதவாக்குப்பதிவைஉறுதிசெய்வதற்கானபணிகள் அனைத்துமாவட்டங்களிலும் முழு வீச்சில் நடைபெற்றுவருகின்றன.

விழுப்புரம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் விளம்பரசுவரொட்டிகள் தயாரிக்கும் அச்சகஉரிமையாளர்களுடன் தேர்தல் நடத்தைவிதிமுறைகள் குறித்துமாவட்டஆட்சியர்கள் எடுத்துக்கூறினர்.

கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, சேலம் உள்ளிட்டமாவட்டங்களில், 100 சதவீதவாக்குப்பதிவைவலியுறுத்தும் விழிப்புணர்வு வாகனபிரச்சாரத்தைஅந்தந்தமாவட்டஆட்சியர்கள் இன்றுதொடங்கிவைத்தனர்.

திண்டுக்கல்லில் உள்ளூர் தொலைக்காட்சிநிறுவனங்கள் கடைபிடிக்கவேண்டியதேர்தல் நடத்தைவிதிமுறைகள் குறித்துஅவற்றின் உரிமையாளர்களுடன் மாவட்டஆட்சியர் ஆலோசனைநடத்தினார்.

மக்கள் அச்சமின்றிவாக்களிக்கஏதுவாகமாநிலத்தின் பல இடங்களில் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ளகாவல்துறையினர் மற்றும் துணைராணுவபடையினரின் கொடிஅணிவகுப்பு நடைபெற்றது.

{}<><><>{}

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளஒன்பதுசோதனைச்சாவடிகளிலும் வாகனங்கள் கண்காணிக்கப்படுவதாகமாவட்டஆட்சியர் திருகோவிந்தராவ் தெரிவித்துள்ளார்.

(வாய்ஸ் பைட் --- கோவிந்தராவ் -- 40 செகண்ட்ஸ்)

{}<><><>{}

நீலகிரிமாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளில் தேர்தல் பாதுகாப்புப்பணிக்காக 300 மத்தியதொழில் பாதுகாப்புப்படையினர் வருகைதந்திருப்பதாகமாவட்டஆட்சியர் திருமதி இன்னசென்ட் திவ்யாதெரிவித்துள்ளார்.

{}<><><>{}

தமிழகசட்டப்பேரவைத்தேர்தல் மற்றும் கன்னியாகுமரிமக்களவைத்தொகுதிதேர்தல் செலவினங்களை 24 மணிநேரமும் கண்காணிக்க, ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகசென்னையில் உள்ளவருமானவரித்துறை புலனாய்வு பிரிவின் தலைமை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அதிகஅளவில் பணத்தைபதுக்கிவைத்தல், தங்கம் மற்றும் விலையுயர்ந்தபரிசுப்பொருட்களைஅனுமதியின்றிஎடுத்துசெல்பவர்கள் மீதான புகார்களைபொதுமக்கள் தெரிவிக்கலாம் .

இதுதொடர்பாகவருமானவரித்துறைவெளியிடப்பட்டுள்ளசெய்திக்குறிப்பில் பொதுமக்கள் தங்களது புகார்களை

1 8 0 0 4 2 5 6 6 6 9 என்றதொலைபேசிஎண்ணில் பதிவு செய்யலாம் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

வாட்ஸ் அப் மூலமாக புகார் அளிக்க 9 4 4 5 3 9 4 4 5 3 என்றஎண்ணைபயன்படுத்தலாம்.

ஈ-மெயில் மூலமாகவும் தேர்தல் செலவினம் குறித்த புகார்களைஅளிக்கவருமானவரித்துறைஏற்பாடுசெய்துள்ளது.

இதற்கானமின்னஞ்சல் முகவரி**itcontrol.chn@gov.in**

**{}<><><>{}**

02 03 2021 5 25 / 6 30 விளையாட்டுச்செய்திகள்விளையாட்டுச்செய்திகள்

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் இன்றுதொடங்குகின்றன.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பிரணவ் சோப்ரா-சிக்கிரெட்டி இணைமற்றும் அஸ்வினிபொன்னப்பா–ரன்கிரெட்டி இணை இன்று பங்கேற்கிறது.

**{}<><><>{}**

**Buenos Aires** –ல் நடைபெற்றுவரும் சர்வதேசடென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சுமித்நாகல் பிரதானசுற்றுக்குமுன்னேறியுள்ளார்.

இன்றுநடைபெறும் முதல் சுற்றுஆட்டத்தில் அவர் போர்ச்சுக்கலின் **Joao Sousa**– ஐ எதிர்கொள்கிறார்.

**{}<><><>{}**

செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடைபெற்றுவரும் சர்வதேசசேலஞ்சர் ஆடவர் இரட்டையர் பிரிவு டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றுஆட்டத்தில் இந்தியாவின் அர்ஜுன் கதே- ஜிம்பாப்வேயின் பெஞ்சமின் லாக் இணை இன்று பங்கேற்கிறது.

**{}<><><>{}**

**End of news**